செ.வெ.எண்:37 நாள்: 24.06.2020

**கரூர் மாவட்டம்**

**அவசரகாலக் கடனளிப்பு உத்தரவாதத் திட்டத்தினை தொழில் முனைவோர் முறையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

அதன் விபரம் வருமாறு:

கொரோனா வைரஸ் காரணமாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார இடர்பாடுகளை சமாளிப்பததற்கு மத்திய அரசால் **அவசரகாலக் கடனளிப்பு உத்தரவாதத் திட்டம் (Emergency Credit Line Guarantee Scheme-ECLGS)** உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பிணையில்லாமல் 20 சதவீதம் வரை கூடுதல் மூலதன கடன் தொகையை உடனடியாக வழங்கும் வகையில் மத்திய அரசு 3 இலட்சம் கோடி நிதி ஒதுக்கீடு செய்து தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மூலம் அவசரகாலக் கடனளிப்பு உத்தரவாதத் திட்டம் (ECLGS) என்னும் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. மேலும் 100 சதவீதம் மத்திய அரசின் கடன் உத்திரவாதம் அளிக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**<u>இத்திட்டத்தின்முக்கிய அம்சங்கள்:</u>**

ஒவ்வொரு வங்கிகள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்களில் 29.02.2020 அன்று நிறுவனத்தினுடைய கடன்கணக்கில் நிலுவையில் உள்ள தொகையில் 20 சதவீதம் வரை கடன் பெற இயலும். இக்கடன் தொகையை 4 ஆண்டுகளில் திரும்பி செலுத்த வேண்டும். இக்கடன் திட்டத்திற்கு தனிக்கணக்கு தொடங்கப்படும் மேலும் முதல் 12 மாதங்களுக்கு அசல் தொகை செலுத்த விலக்கு அளிக்கப்படும். செயலாக்க கட்டணத் தொகை இல்லை, பிணையத் தொகை இல்லை.

**<u>தகுதிகள்:</u>**

இக்கடன் பெறுவதற்கு அனைத்து குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள, பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மற்றும் பிரதம மந்திரியின் முத்ரா திட்டத்தின் கீழ் துவங்கப்பட்டுள்ள நிறுவனங்கள், சுய உதவிக்குழுக்கள் ஆகியவை கடன் பெற தகுதி உள்ளது. 25 கோடி ரூபாய் வரை கடன்பெற்று தொழிலைப்பெருக்கி 100 கோடி ரூபாய் வரை வருவாய் ஈட்டிய (Turn Over) நிறுவனத்தினரும், சரக்கு மற்றும் சேவை வரி(GST) பதிவு செய்த அனைத்து நிறுவனத்தினரும் கடன் பெற தகுதி உடையவராவர். கடன் தவணையை 60 நாட்களுக்கு மேல் கட்ட தவறிய நிறுவனங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற இயலாது.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் நிறுவனங்கள் தங்களது வங்கிகளை தொடர்பு கொண்டு உரிய ஆவணங்களை சமர்ப்பித்து பயன்பெறலாம். இத்திட்டம் குறித்த மேலும் விபரங்களுக்கு பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், தாந்தோணிமலை, கரூர் அவர்களை அணுகலாம்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தெடாடர்பு அலுவலர், கரூர்.**